பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஸூ ஐப்பசி மீ 06 உ செவ்வாய்க்கிழமை (23 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற ஆகிர் 03 கதிர்: 230

# சிமெந்து ஆலைப் பகுதியில் கடும் சண்டை!

## மாவிட்டபுரம், வீமன்காமத்திலும் புலிகள் - ராணுவம் நேரடி மோதல்

யாழ்ப்பாணம், அக். 23

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி, காங்கேசன் சிமெந்து ஆலைப்பகுதிவரை முன்னேறியுள்ள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு முதல் கடும் சண்டை இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை, வீமன்காமம், மாவிட்டபுரம் பகுதிகளிலும் நேரடி மோதல்கள் இடம் பெற்று வருவதாக அப்பகுதிகளில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை—

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு காங்கள் நடத்திய 'கால் ஸ்ரோ' தாக்குதலில் இராணுவத்தினரின் 'சலாடின்' ரக வாகனம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன

மாவிட்டபுரம் சந்திச் சுற்றாடலில் இராணுவம் பல கட்டடங்களில் தங்கியிருப்பதாகவும் -

அவர்கள் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல்களினாலும், வீமன்காமம் - மற்றும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், அக். 23

நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'சிகிரியா' கப்பலில் யாழ். மாவட்டத்திற்கான 50 தபால் பொதிகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தத் தபால் பொதிகள் நேற்றே செஞ்சிலுவை வாகனம் மூலம் யாழ். பிரதம தபால் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டன. (ஓ 5)

## ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், அக் 23

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களை உடன் அனுப்பி வைக்குமாறு கொழும்பில் உள்ள அதிகாரிகளை யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (ஓ-6)

## கடற்படை சூடு! தமிழர் பலி

யாழ்ப்பாணம், அக் 23

மட்டக்களப்பு மாவட்டம் நீலாவணைத் துறையிலிருந்து கடந்த ஞாயிறன்று அண்ணாமலைக்கு தோணியில் சென்றோர் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு தமிழர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமுற்றார்.

சீனித்தம்பி முருகுப்பிள்ளை (வயது 46) என்ற பத்துப் பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்தவராவார் (உ)

## மிதிவெடியில் சிக்கி காயம்

கோட்டைப் பகுதியில் நேற்று மிதிவெடியில் சிக்கி ஒருவர் காயமடைந்தார்.

குருநகரைச் சேர்ந்த அந்தோனி (வயது 37) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ஓ-5)

## மாவீரர் நாளையொட்டி இலவச மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம், அக். 23

எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழீழ மாவீரர் நாளாகும். அதனையொட்டி அன்றைய தினம் பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவீரர் நாள் நிகழ்ச்சிகளில் மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வசதியாக அன்றையதினம் இலவசமினி பஸ் சேவைகளுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற்ற வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கக் கூட்டத்தில் இலவச மினிபஸ் சேவை நடத்துவது என்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 5 போராளிகள் 'வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 23

நேற்றும் நேற்று முன்தினமும் வலி. வடக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம் பெற்ற மோதல்களில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் ஐவர் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் முத்து. லிங்கம் ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்று மகேஸ் (வல்லிபுரம் இராமச்சந்திரன் - மிருசுவில்) என்ற போராளியும் மற்றும் இரு போராளிகளும்வீரமரணமடைந்தனர். (உ)

## கோப்பாயில் பொம்மர் தாக்குதல்

## ஒருவர் துடிதுடித்து மரணம்

கோப்பாய், அக். 23

நேற்றுக்காலை 9 30 மணி அளவில் கோப்பாய்ச் சந்திக்கு அருகில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தின.

அவற்றால் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

மொத்தம் நான்கு குண்டுகள் அப்பகுதியில் வீசப்பட்டன

முதலாவது குண்டு சந்திக்கு அண்மையிலிருந்த சராஜ் ஒன்றின் பின்னால் விழுந்து வெடித்தபோது ச. விநாசித்தம்பி [வயது 60] என்பவர் வயிறு சிதறி துடிதுடித்து மரணமானார். அவரது மனைவி சோதி (வயது 52) காலில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இரண்டாவது குண்டு வீடு ஒன்றின் மீது விழுந்தது அப்போது பாதுகாப்புக்காக தமது வீட்டை விட்டு வெளியேறி அயல் வீட்டிலிருந்த இ. செல்லையா (வயது 70) என்ற ஓய்வுபெற்ற தபால் ஊழியர் காயமடைந்தார்.

அடுத்த இரண்டு குண்டு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 2 சிப்பாய்கள் கால் இழந்தனர்

கடந்த வியாழனன்று ஏறாவூர் வீரபத்திர கோவிலடியிலும் செங்கலடியிலும் விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கி இரண்டு சிப்பாய்கள் கால்களை இழந்தனர் (உ)

## கடும் மழையை அடுத்து போக்குவரத்துச் சேவை தடைப்படும் நிலையில்

கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழையை அடுத்து யாழ்ப்பாணம் —வவுனியா போக்குவரத்துச் சேவை தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக கொம்படிவெளிப் பாதை சேறும் சகதியுமாக காணப்படுகிறது. இதனால் இப்பாதையூடாக வாகனங்கள் எதுவும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு புறப்பட்ட சில பஸ்கள் இயக்கச்சி வரை சென்று கொம்படிப் பாதையால் செல்ல முடியாத நிலையில் திரும்பிவிட்டன. (ஓ-6)

## புன்னாலைக்கட்டுவனில் ஞாயிறு மாலை குண்டுமாரி

உரும்பராய், அக். 23

புன்னாலைக்கட்டுவன்தெற்கில் நேற்று முன் தினம் (ஞாயிறு) மாலை கடும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இரண்டு பொம்மர்களும் ஓர் அவ்ரோவும் தாக்குதலில் ஈடுபட்டன.

குண்டுவீச்சினால் அப்பகுதியிலுள்ள பிரபல அரிசி ஆலையும், ஒருவீடும் நாசமாகின. அரிசி ஆலையிலுள்ள பெறுமதியான இயந்திரங்களும் சேதமாகின.

இவற்றுக்கு அருகிலுள்ள மின்தறி ஆலை, ப. நோ. கூ. சங்கக்கிளை, உபதபாற் கந்தோர், ஒரு வீடு என்பனவும் சேதமடைந்தன.

தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. (ஓ-154)

## மலேசியாவில் மீண்டும் மஹதீர்

கோலாலம்பூர், அக் 23

மலேசியாவில் பிரதமர் டாக்டர் மஹதீர் மஹ்மூத் தலைமையிலான ஆளும் தேசியக் கூட்டணி மூன்றாவது தடவையாக ஆட்சியைப் பிடித்தது.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடந்த பொதுத்தேர்தலில் 180 ஆசனங்களைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரெழுவில் ஷெல்

உரும்பராய், அக். 23

ஊரெழு தெற்குப் பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்தது.

[illegible] தன. (ஓ-154)

## கிரான்குளம் சுற்றிவளைப்பு; நால்வர் சுட்டுக்கொலை

கடந்த சனியன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான்குளத்தைச் சுற்றிவளைத்த படையினர் அங்கு நூற்றுக்கு மேற்பட்டோரைக் கைது செய்ததாகக் கூறப்பட்டது.

பின்னர் கைதானோர்களில் சோபால், சிவா, வதி, வைரமுத்து ஆகிய நால்வரும் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும்-

சுகுணன், புவனேஸ், பாக்கியராஜா, முருகுப்பிள்ளை ஆகியோர் தடுத்து வைக்கப்பட ஏனையோர் விடுவிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ராம ஜன்ம பூமி விவகாரம்: வி.பி.சிங் விடாப்பிடி! முன்னணி அரசுக்கு ஆபத்து!!

ராம ஜன்ம பூமி விவகாரத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு எனது அரசு வீழ்ச்சியடைந்தாலும் தீர்க்கமான நடவடிக்கை எடுப்பேன்.

இந்தியப் பிரதமர் வி.பி. சிங் இவ்வாறு நேற்று பகிரங்கமாக அறிவித்தார்.

இதேசமயம்—

பாரதிய ஜனதாக் கட்சி தலைவர் அத்வானி, ராமர் கோயில் கட்டுவதற்கு முன்னேற்பாடாக தாம் ஆரம்பித்திருக்கும் ரத யாத்திரையை நாளை மறுதினம் உத்தரப் பிரதேச மாநிலத்தினுள் தொடரவிருக்கிறார்.

ஆனால் -

[4-ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்


### கல்வி

பழைய/புதிய கொம்பியூட்டர் பிரிவுகளும், Shorthand & Typing (English), C. I. M. A. I D.P.M, I A B வகுப்புக்களும், விரைவில் ஆரம்பமாகவுள்ளன விபரங்கள் நேரில்: தினசரி 9.00 - 12.00 மணிவரை School Of Business Administrion, 16, 3rd Cross Street, Jaffna. [சி-5328]

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo Enterprises பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில். (சி-5219)

### இலவசம் நாவல்கள்

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் உயிரோட்டமான நாவல்கள் மீராவெளியீடுகள் 100/ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/-ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் யாழ்ப்பாணம். பிக்பென்ஸ் (B) கிளிநொச்சி. (14504)

### இடமாற்றம்

இல. 66 பெரிய கடை யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிய சும்பிகவதி பென்சி கூட்ஸ் வடிக்கையாளரின் பாதுகாப்பு கருதி 54, அம்மன் வீதி (வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமை) நல்லூர் எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. (14523)


# சுருட்டுத் தொழிலாளர்கள் விமோசனம் கோரி மகஜர்

யாழ்ப்பாணம், அக். 23

சுருட்டுத் தொழிலாளர் சங்கம் மீண்டும் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். சுருட்டுத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் யாழ் மாவட்ட சிற்றாரவைகளின் தலைவரிடம் கடந்த சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சுமார் ஈராயிரம் சுருட்டுத் தொழிலாளர்கள் இதில் ஒப்பமிட்டுள்ளனர்

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இவ்வேளையில் சுருட்டுத் தொழிலாளர்களின் சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது. ஆயிரம் சுருட்டுக்கான கூலி 150 ரூபாவில் இருந்து தற்போது 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

சுருட்டின் விலையில் வீழ்ச்சி ஏற்படாத போதும் கூலிமட்டும் குறைக்கப்பட்டிருப்பது அநீதி ஆகும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 15)

## 9ஆம் வகுப்பில் தொழில் நுட்ப பரீட்சை

கொழும்பு அக். 23

ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் அடுத்த ஆண்டில் இருந்து கனிஷ்ட தொழில் நுட்பத்தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

1991 இல் இருந்து அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய பாடத்திட்டம் இதற்கு வழி செய்திருப்பதாக கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்தார். (இ-எ)

## கொடிகாமத்தில்

கொடிகாமம், அக் 23

பலாலியில் வீரமரணமடைந்த ரஹீமின் பூதவுடல் கொடிகாம சந்தையில் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது வெள்ளிக்கிழமை மாலை பொதுமக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

கச்சாயிலுள்ள மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது. (இ-75)

## பூதவுடல்கள் கோட்டையில் தகனம்

யாழ்ப்பாணம் அக். 23

பலாலியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த வேங்கைகள் அன்ரனி (முன்னாள் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர்), நஸார் ஆர்த்தி ஆகியோரின் பூதவுடல்கள் விடுதலைப்புலிகளின் இராணுவ மரியாதையுடன் கோட்டையில் தகனம் செய்யப்பட்டன.

இவர்களது பூதவுடல்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக கடந்த சனிக்கிழமை கச்சமோட்டை சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தன

பின்னர் அங்கிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் புலிகளின் ராணுவ அணிவகுப்புடன் பூதவுடல்கள் யாழ். கோட்டைக்கு எடுத்துவரப்பட்டு அங்கு தகனம் செய்யப்பட்டன.

வீரமரணமடைந்த வேங்கைகளின் அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், அரசியல் பிரமுகர் திரு. தேவர் உட்பட பலர் உரையாற்றினர். (இ 6)

## முடிவு திகதி நீடிப்பு

ஸ்ரீலங்கா நிர்வாக சேவையின் இரண்டாம் தரத்தின் இரண்டாம் வகுப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி வர்த்தமானியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு இப்போது அறிவித்துள்ளது. (அ)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

சரஸ்வதி சோதிப்பெருமாள்



மலர்வு: 1933 - 11 - 27

உதிர்வு: 1988 - 11 - 14

திதி: 1990 - 10 - 23

எம்மை எல்லாம்
ஆறாத் துயரில் ஆழ்த்தி
விட்டு அணைந்த அம்மா
எத்தனை ஆண்டுகள்
மறைந்தாலும் உம் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கணவன், பிள்ளைகள், உறவினர்கள்.

'சரஸ்வதி மகால்'
இணுவில். [14532]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி இம்மனுவல் யேட்றாட் [றீற்றா]

தோற்றம்: 19 - 12 - 1932

தேற்றம்: 24 - 09 - 1990

நாட்டில் அரக்கர் நடத்திய
அமர்க்களப் போரில் நாமலைந்தோம்!
வீட்டை விட்டு மூன்றுக்கும்
மேலான மாதங்கள் தாமலைந்தோம்!

வாழ்க்கைப் பெருங்கிலுவை தூக்கி
வாழ்நாளில் நாமுயரச் செய்த அன்னை
ஆழ்ந்த தூக்கம் கொண்டதிந்த
அவலம் சூழ்ந்த நாட்கள் தானோ?

இறுதியாத்திரை செல்வதற்கும்
இனத்தார் சுற்றம் கலப்பதற்கும்
பொருந்தியற்ற காலந் தன்னில்
பொசுக்கென விட்டெமை போனதேனோ?

அம்மா நீங்கள் வாழ்ந்த நாளில்
அன்பும், பரிவும் அணைக்க வாழ்ந்தோம்!
இம்மா நிலத்தெம் காலங்களெல்லாம்
இருக்கும் உங்கள் இதயத்து நினைவு!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாளை (24-10 90) புதன்கிழமை காலை 6 15 மணிக்கு யாழ். ஆசனக் கோவிலில் நடைபெறும் திருப்பலியில் பங்குகொண்டதுடன், மவுண்கார்மல் மண்டபத்தில் நடைபெறுகின்ற உபசரணையிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர், மைத்துனிமார்.

28 மவுண்கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். [14534]


# ஸ்ரீலங்கா விசாரணைக் குழுவுக்கு தகவல் கொடுப்பதற்குத் தயார்!

## மொசாட் அதிகாரி கூறுகிறார்

ஒட்டாவ, அக். 23

''மொசாட்'' உளவுப் படையின் நடவடிக்கைகள் குறித்து சர்ச்சைக்குரிய நூலை எழுதிய முன்னாள் மொசாட் அதிகாரி விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி -

ஸ்ரீலங்கா அரசாங்கம் மொசாட் நடவடிக்கைகள் சம்பந்தமாக விசாரிப்பதற்கு நியமித்த ஆணைக் குழுவுக்குத் தகவல் கொடுப்பதற்குத் தயார் என்று - தெரிவித்திருக்கிறார்.

''நான் ஒன்றைச் சொன்னால் அதனை உறுதிப்படுத்தத் தயங்குவதில்லை. உத்தியோக பூர்வமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறி எதனையும் சொல்வதில்லை. ஸ்ரீலங்கா அரசின் ஆணைக்குழுவுக்குத் தேவைப்படும் தகவல்களைத் தெரிவிக்க நான் தயாராக உள்ளேன்'' - என்று கனடாவில ஒளிந்திருக்கும் இடத்தில் இருந்து அவர் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்துள்ளார்.

சொந்தக் காரணத்துக்காக என்னால் ஸ்ரீலங்கா செல்ல முடியாது. கனேடிய வெளிநாட்டு அமைச்சின் அனுமதியைப் பெற்று ஸ்ரீலங்கா பிரதிநிதி எவரும் இங்கு வந்தால் நான் பயனுள்ள தகவல்களைத் தெரிவிக்க முடியும்- என்றும் அவர் சொன்னார்.

கனடாவுக்கு வெளியே செல்வது தனக்கு உயிராபத்தானது என்று கூறிய திரு ஒஸ்ரோவ்ஸ்கியின் சர்ச்சைக்குரிய ''ஏமாற்றும் வழியில்: மொசாட் அதிகாரி ஒருவர் உருவாகிறார்; அழிக்கப்படுகிறார்'' என்ற நூலின் 4 லட்சத்து 50 ஆயிரம் பிரதிகள் மூன்று வார காலத்தில் விற்பனையாகி உள்ளன.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்த நூலை, 20 மொழிகளில் வெளியிடுவதற்கு அதன் பிரசுர கர்த்தாக்கள் வெளியீட்டு உரிமையை விற்றுள்ளார்கள் என்று திரு ஒஸ்ரோவ்ஸ்கி தெரிவித்தார்.

இதேவேளை ''நியுயோர்க் டைம்ஸ்'' பத்திரிகையின் கணிப்பின்படி இப்போது அதிகம் விற்பனையாகிக் [illegible] வகிக்கிறது. (அ)


## JAFFNA ENGLISH ACADEMY

- ★ TOEFL,
- ★ ESOL (Lond), English for Speakers Of Other Languages
- ★ English for Bussiness Communication E. B. C (Lond)
- ★ Spoken English and
- ★ G. C. E. (Advanced Level) English

ஆகிய புதிய/பழைய வகுப்புக்கள் சனிக்கிழமை 28 10 90முதல் ஆரம்பமாகின்றன.

விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

நேரில் தொடர்பு கொள்ளவும்:

9, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[சி-5329]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நீலிக் கண்ணீர்

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பெருந்தொகையான அப்பாவி மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர். இந்தப் பெரிய உண்மையைக் கண்டு பிடித்திருப்பவர் நாட்டின் அரசுத் தலைவரான ஜனாதிபதி இதனைக் கண்டுபிடிக்க அவருக்கு நாலரை மாதங்கள் பிடித்துள்ளன என்பது வியப்புத் தருவதாகும்!

ஜூன் மாதம் 18 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் யுத்தம் நடத்தப் போவதாக ஆக்ரோஷத்துடன் பிரகடனம் செய்தபோது, அப்பகுதியில் வாழும் மக்கள் யுத்தத்தினால் உயிரிழப்புகளை, உடைமை அழிவுகளை மற்றும் பல அவலங்களை அனுபவிக்க நேரிடும் என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லையோ?

போரின் அகோரத்தனத்தால் அகோரப்பற்களால் கடித்துத் துண்டாடப் படுபவர்கள் மக்களே என்பதை மேடைக்கு மேடை தத்துவங்களையும், கோட்பாடுகளையும், இதிகாசங்களையும்சொல் மினுக்குப்போடும் ஜனாதிபதிக்கு மறந்து போயிற்றோ? அல்லது அவரின் கட்டுக்கோப்பும், ஒழுக்கமும் கெட்ட படைகள் அப்பாவிப் பொதுமக்களைத் தீண்டாமல் போர் நடத்துவார்கள் என்று அதீத கற்பனை செய்தாரோ?

கடந்த நாலரை மாதங்களிலும் சுமார் நாலாயிரம் அப்பாவித் தமிழர்களைத் தமது வான், தரை, கடற் படையினர் கொன்றது ஜனாதிபதிக்கு இதுவரை தெரியாதா? உணவுப் பொருள் தொடக்கம் எரிபொருள் வரை, உரம் தொடக்கம் மின்சாரம்வரை வடக்கு - கிழக்குக்கு அனுப்பாமல், பிரகடனப்படுத்தாத பொருளாதாரத் தடையை அமுல் செய்வதால் அப்பகுதி மக்களின் வாழ்வையும், உயிரையும் தாம் நசுக்குவதை உணரும் தகுதி இல்லாதவரா அவர்?

வடக்கு-கிழக்கு வாழ் அப்பாவி மக்கள் - தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்களுக்கெல்லாம் சூத்திரதாரியே அரசின் தலைவர்தானே? அல்லாவிடில் தமக்குத் தெரியாமல், தமது ஆணையின்படி அல்லாமல், இத்தனை இராணுவ, சிவில் அட்டூழியங்களும் நடக்கின்றன என்று அவர் நம்பச் சொல்கிறாரா? உலகத்தை நம்பச் செய்யமுடியும் என்று நம்புகிறாரா?

வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் மீது கரிசனை காட்டும், கழிவிரக்கம் கொள்ளும் புலன் திடீரென இவர் மனதில் உதித்தது எதற்கோ? சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

வேறு எதற்காக...? பாரிஸில் நடக்கும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம், சர்வதேச நாணய சபையின் கூட்டம் என்பன அடுத்தடுத்த வாரங்களில் நடக்கப்போகின்றன.

அங்கே கண் வைத்ததும் தான், அதில் எரிவு ஏற்பட்டு, இங்கே தமிழர்களுக்காக, வடக்கு - கிழக்கு அப்பாவி மக்களுக்காக நீலிக் கண்ணீர் உகுகின்றது!

இது ஈழத் தமிழர்களுக்குத் தெரியும்; புரியும். உலக நாடுகளுக்கு அது புரிய வேண்டுமே! உலகுக்கு அதனைப் புரியவைப்பது மேற்குலகில் வாழும் தமிழர்களின் தலையாய பொறுப்பு

---

மக்கள் வங்கி பிராந்திய அலுவலகம் துண்டாடப்படுகிறது

# மட்டக்களப்பு - அம்பாறைத் தமிழர் கடன் வசதியை இழக்கும் ஆபத்து

மட்டக்களப்பு, அக். 23

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு பொதுவாக இயங்கி வந்த மக்கள் வங்கி பிராந்திய அலுவலகத்தை துண்டாடியதன்மூலம் இருமாவட்டங்களிலும் உள்ள தமிழ் மக்கள் கடன்பெறும் வசதியை இழக்க வேண்டிய நிலைக்குத் தளப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களின் விவசாய, வியாபார முயற்சிகளுக்கும் மற்றும் சேவைகளுக்கும் கடன் வழங்க மட்டக்களப்பில் மக்கள் வங்கி பிராந்திய அலுவலகம் செயற்பட்டு வந்தது.

இந்தப் பிராந்திய அலுவலகம் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு சரிசமனாக கடன் வசதிகள் வழங்கப்பட்டுவந்தன.

தலைமையகமும், அரசும் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக மட்டக்களப்பில் இருந்து அம்பாறை மாவட்டத்துக்கான நடவடிக்கைகள் பிரிக்கப்பட்டு அம்பாறையில் தனியான பிராந்திய அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முழுமையான அளவில் அந்த அலுவலகம் செயல்படாத போதும், சிங்கள அதிகாரிகளும், சிங்கள பிராந்திய முகாமையாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்துக்கு நடுவில் அமைந்துள்ள கல்முனையிலேயே அலுவலகம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அலுவலகம் அம்பாறை நகரத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்ட பிரிவினையால் அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட தமிழர்கள் மட்டுமல்ல முஸ்லிம் மக்களும் பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3-6)

## அகதிகளுக்கு உடுபுடவை

புளியங்கூடல், அக். 21

இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து தற்போது சரவணை சின்னமடு அகதி முகாமிலும் மற்றும் இடங்களிலும் தங்கி உள்ள சுமார் 500 அகதிக் குடும்பங்களுக்கு புளியங்கூடல் சிற்றூரவை அலுவலகத்தில் வைத்து உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் மதி தலைமையில் இந்த வைபவம் இடம் பெற்றது. ( -5)

சமீபத்திய ராணுவ நடவடிக்கையில்

## ரூ. 1 லட்சம் பெறுமதியான முத்திரைகளைக் காணோம்

காரைநகர், அக். 23

கிளிநொச்சி தபால் நிலையத்தில் இருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகளும், சுமார் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பணமும் சமீபத்திய இராணுவ நடவடிக்கையின் போது காணாமற் போய்விட்டன.

தபால் நிலையத்துக்குள் இருந்த சில பத்திரங்களும் எரிக்கப்பட்டுள்ளன. (இ-144)

# ஸ்ரீலங்கா படையினரின் கூடாரத்தை உடைக்க சாவின் கதவைத் தட்டிப் புறப்பட்ட புலிகள்!

## (V)

கோட்டையின் தென்மேற்குப் பக்கத்தில் விடுதலைப் புலிகளின் காவல் அரண்கள் ஏதும் இல்லை என்பதால் — கடற்கரை வீதிக்கு அப்பால் கடலால் சூழப்பட்ட அந்தப்பக்கத்தில் — அவ்வளவு சிக்கல் இருக்காது எனக் கோட்டைப் படையினர் அசட்டையாக இருந்தபோது— அவர்களின் பலவீனத்தைத் தங்கள் பலமாகப் பாவித்து— திட்டத்தை வகுத்திருந்தார்கள் விடுதலைப்புலிகள்.

பாரம்தூக்கிகளையும், புல்டோசர்களையும் கவச வாகனங்களாக மாற்றி, அவற்றைக்கொண்டு கோட்டையின் தென்மேற்குப் பகுதியில் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தி அதனைக் கைப்பற்றுவது— என்பதே புலிகளின் திட்டம்;

தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்து பண்ணைச் சந்திக்கு ஊடாகவும்—

துரையப்பா விளையாட்டரங்கு பக்கத்திலிருந்து பொலீஸ் விடுதிப்பக்கமாகவும்—

இந்தக் கவச வாகனங்களைக் கடற்கரை வீதிவழியாக ஓட்டிச்சென்று கோட்டைப் பின்புறத்தைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

### சாவின் கதவைத் தட்டுவது போல

கோட்டையின் பின்புறக் கொத்தளத்தில் உள்ள இராணுவத்தினர் தமது காவல் அரண்களில் இருந்தபடி பொழியப்போகும் குண்டு மழைக்கும், பீரங்கித் தாக்குதல்களுக்கும் இடையில்—

அந்தக் கொத்தளத்தின் அருகே— அதற்கு சமாந்தரமாக— சுமார் முப்பது யார் தூரத்தில்— செல்லும் பாதையின் வழியே, இருமுனைகளில் இருந்து புறப்படும் கவச வாகனங்களை [illegible] முன்னூறு யார் [illegible] செலுத்தி, கோட்டைப் பின்புற வாசலை அடைவது என்பது சாவின் கதவைத் தட்டுவது போன்றதாகும்.

ஆனாலும் தமது உயிரைத் துச்சமென மதித்து, ஸ்ரீலங்காப் படையினரின் கூடாரத்தை உடைத்துப் புறப்பட்ட வேங்கைகளுக்கு அது ஒரு பொருட்டாகவில்லை.

ஆகஸ்ட் 5 ஆம் திகதியின் இரவு வேளை......

திட்டமிட்டபடி திடீர்த் தாக்குதல் முனைப்புடன் ஆரம்பமானது

கோட்டையைச் சூழவுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளில் இருந்து கோட்டையை நோக்கிச் சரமாரியாக ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் கோட்டைக்குள் விழுந்து வெடித்த போது கோட்டை அதிர்ந்தது. உள்ளேயிருந்த சிப்பாய்களின் அவலக்குரல்கள் கோட்டைக்குள் பல திசைகளிலும் எதிரொலித்தன.

### கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

### பின்னிரவுப் போர்

அவ்வேளை .........

புலிகளின் கவச வாகனங்கள் கோட்டையின் பின் பகுதியை நோக்கி நகரத் தொடங்கின .........

அந்தப் பின்னிரவில் கோட்டைப் பகுதியில் சூழ்ந்திருந்த யுத்த மேகங்கள் குண்டு மழை பொழிந்து ஓய்ந்த போது ...... பின்னிரவு நீங்கி பொழுது புலர்ந்திருந்தது...!

அதற்குள் நடந்தது என்ன ......?

அந்தத் தாக்குதலினால் அழிந்து போன கோட்டையின் பின்பகுதிகளை நாம் பார்த்துக் கொண்டிருந்த போது எங்களுடன் கூட வந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் அந்தப் பின்னிரவில் நடந்த கடும் போரை எங்களுக்கு விளக்கிக் கூறினார்.

ஒவ்வொரு சம்பவங்களையும் அங்கு கிடக்கும் போரின் எச்சங்களுடன் இணைத்து கற்பனையில் பார்த்துக் கொண்டோம்.

கடும் தாக்குதல்களை அடுத்து, விடுதலைப் புலிகள் [illegible] ஒரு கொத்தளப் பகுதியை கைப்பற்றிக் கொண்டது எப்படி?

அப்படிக் கைப்பற்றிய பின்னரும் — அன்றைய நாளிலேயே-கோட்டையை முற்றாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் விடுதலைப் புலிகள் வீழ்த்த முடியாது போனது ஏன்?

கோட்டைச் சிப்பாய்கள் அன்று தப்பிப் பிழைக்க வாய்ப்புக் கிடைத்தது எப்படி?

அந்தத்தாக்குதலின் போது நடந்தது என்ன? புலிகளின் முயற்சி "சறுக்கியது" எங்கே?

அடுத்த பகுதியில் அந்த விபரங்களைப் பார்ப்போம்.

(வளரும்)

- கூர்விழியான்

## கந்தபுராணக் கருவூலம்

### சண்முக தரிசனம்

திருச்செந்தூரில் தேவாதியர்களின் துயர்களைத் திருச்செவிமடுத்த முருகவேள், அவர்களுக்கு அபயமளித்தார். இந்திரனை நோக்கி "தேவராஜனே வருந்தாதே உனது மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறைமீட்டு அமராவதி ஆட்சியை விரைவில் உனக்குத் தருவோம்" என வாக்களித்தார்.

போருக்குப் புறப்படுமுன் சூரபன்மனுடைய தவறுகளை எடுத்துச் சொல்லி அவனை நல்வழிப்படுத்த திருவுளங்கொண்ட கந்தவேள் வீரவாகு தேவரை விளித்து "நீ வீரமகேந்திரபுரிக்குச் சென்று சூரபன்மனை அணுகி சயந்தனையும் தேவர்களையும் சிறையில் இருந்து விடுவித்து நல்வாழ்வு வாழுமாறு அறநெறியை எடுத்துக் கூறு அவன் செவிசாய்க்கா விட்டால் அவனையும் அவனது

### ஸ்கந்தசஷ்டி சிறப்பம்சம்

சுற்றத்தையும் அழிக்கப்படைகளுடன் வருவோம் என்று தெரிவித்து மீள்க" எனக் கட்டளையிட்டார்.

தூதுவனாகச் சென்ற வீரவாகு தேவர் சூரபன்மனிடம் "தேவர்களும் அசுரர்களும் காசிபருடைய புதல்வர்கள். உனது தாயாகிய மாயைக்கும் பிறந்தவர்கள் அசுரர்கள் தேவர்கள் உனது மூத்த சகோதரர்கள். எனவே சயந்தனையும் தேவர்களையும் விடுதலை செய்து முருகப் பெருமானின் திருவருளைப் பெற்று நெடுங்காலம் வாழ்வாயாக. தவறினால் உன்னையும் உன் குலத்தையும் அழித்து விடுவார்" என நீதி நெறிகளை இதமாக எடுத்துச் சொன்னார்

கண்களில் கனல் பறக்க "நீ தூதுவனாக இருப்பதால் உன்னைக் கொல்லாமல் விட்டு விடுகிறேன் தேவர்களை ஒருநாளும் விடுதலை செய்யமாட்டேன். பால

- அழகு அருணாசலம் -

சனின் பேச்சைக் கேட்டுத் தூதுவனாக வந்த உன்னை ஒரு பேதை எனக் கருதி உனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தேன். பிழைத்துப் போ. ஓடு" என்று ஆர்ப்பரித்தான் சூரபன்மன்.

வீரவாகு தேவர் மீண்டும் வந்து நடந்தவற்றை முருகப் பெருமானிடம் கூறினார்.

போர் தொடர்ந்தது.

இரண்டாம் நாள் போரில் தான் பாலகன் என்று எண்ணி நகையாடிய முருகவேளை முதன்முதலாகச் சந்திக்கிறான் சூரபன்மன் பயங்கரமும் பகைமையும் தலைவிரித்தாடும் யுத்த பூமியில் கருணை பொழியும் முகத்துடன் காட்சி தந்தார் கந்தவேள்.

தாமரை மலர் மலர்ந்தது போன்ற ஆறு திருமுகங்களையும் பன்னிருகைகளையும், பன்னிரு குண்டலங்களையும், செம்பொன்னால் ஆன திருமுடிகளையும், அழகிய திருமார்பினையும், பன்னிருகரங்களில் விளங்குகின்ற படைக்கலங்களையும், தண்டையும் சிலம்பும் ஒலிக்கின்ற திருவடிகளையும் சூரபன்மன் கண்டான்.

முண்டக மலர்ந்ததன்ன மூவிரு முகமுங் கண்ணும்
குண்டல நிறையுஞ் செம்பொன் மவுலியுங் கோலமார்பும்
எண்டரு கரம் ஈராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையும்சிலம்பும் ஆர்க்கும் சரணமும் தெரியக்கண்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்படிப் பாதையிலே பொம்மர் திடீர் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 23 வவுனியாவில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றி வந்த வாகனங்களை நோக்கி பொம்மர் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 4 45 மணி அளவில் கொம்படிப் பாதையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

பொம்மர்கள் வருவதற்கு முன்பு அந்தப் பகுதியில் சீ-பிளேன் வட்டமிட்டு நோட்டமிட்டதைத் தொடர்ந்து மக்கள் பாதுகாப்பிடங்களில் தஞ்சம் புகுந்ததால உயிரிழப்பு ஏற்படவில்லை.

பொம்மர்களில் இருந்து வீசப்பட்ட நான்கு குண்டுகளில் இரண்டே வெடித்தன. மற்றவை சகதியில் சிக்கின. (இ-3)

# 3 ஆம் கட்ட நிவாரணத்துக்கு நேற்றுக் கடைசி நாள்

## பலர் தவறவிட்டனர்

யாழ்ப்பாணம், அக். 23 மூன்றாம்கட்ட நிவாரணம் வழங்குவதற்கான இறுதித் திகதி நேற்று 22 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதும் பலர் நிவாரணம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த, தொழில், வருமானம் இழந்த மக்களுக்கான மூன்றாம்கட்ட நிவாரணத்தை 22 ஆம் திகதிக்குள் வழங்கி முடிக்க வேண்டும் என்று யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உதவி அரசாங்க அதிபர்களைப் பணித்திருந்தார்.

அதேவேளை— ஊரடங்குச் சட்டத்தைக் காரணம் காட்டி சில உதவி அரசாங்க அதிபர்களும், கிராமசேவையாளர்களும் நிவாரணம் பெறுவதற்கான பெர்மிட்டுக்களை வழங்கவில்லை என்று மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். (இ-3)

## கலந்துரையாடல்

யாழ்- பல்கலைக்கழக கல்வி சார்ந்த கல்விசாராத டணியாளர்களின் அக்டோபர் மாதச் சம்பளம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பல்கலைக் கழகத்தில் நடைபெற இருக்கிறது. [இ-3]

# மரண அறிவித்தல்கள்

வீரவேங்கை

## மோகானந்தன் [மூவின்]

சித்திரபேழி இளவாலையைச் சேர்ந்த இராசரட்ணம் மோகானந்தன் (மூவின்) 19 – 10 – 1990 அன்று வீரமரணமடைந்து விட்டார். இவர் இராசரட்ணம் (சின்னண்ணை), தங்கலட்சுமி(வெள்ளைச்சி) தம்பதியரின் அன்பு மகனும் நித்தியானந்தன் (நித்தி), புஸ்பராணி (புஸ்பன்), ஜெயானந்தன் (ஜெயா). சற்பகவதி (கற்கம்), கலாவதி (கலா), இந்திராவதி (இந்திரா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இராசரட்ணம்.

சித்திரபேழி,
இளவாலை (14531)

## முத்துக்குமாரு வினாயகசேகரம்

[Rtd. P H I.]

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துக்குமாரு வினாயகசேகரம் 22-10-1990 காலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி முத்துக்குமாரு தம்பதிகளின் புதல்வரும், சீதாதேவியின் அன்புக் கணவரும், சிவபாலன் [ஜேர்மனி], ஜோதிபாலன், இந்துமதி இவர்களின் அருமைத் தந்தையும், ஞானேஸ்வரியின் சகோதரரும், காலம்சென்ற பரம்சோதி, இராமலிங்கம் [அருணா ஸ்ரேட்ஸ், பரந்தன்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22 10 1990 மாலை 2-00 மணிக்கு யாழ். கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. இராமலிங்கம்
[மைத்துனர்]

'நெல்லி வாசா'
190, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (14261)

## கி. நாராயண சாஸ்திரிகள்

[கோண்டாவில்]

கோண்டாவிலைச்சேர்ந்த பிரம்மஸ்ரீ கி நாராயண சாஸ்திரி அவர்கள் 22-10-1990 இல் காலமானார்.

இவர் சாரதாம்பாளின் அன்புக் கணவரும், கல்யாணி, பவானி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கி. சோமசுந்தரஐயர், அ. சுந்தரராஜ் ஆகியோரின் மாமனாருமாவார்.

தகனக் கிரியைகள் 23-10-1990 இன்று பகல் 12 00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
கி. விஸ்வநாதசர்மா

கே கே. எஸ். றோட்,
கோண்டாவில். [14539]

# பாகிஸ்தானில் நாளை தேர்தல்

பாகிஸ்தானில் நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகளுக்கான பொதுத்தேர்தல் நாளை புதன்கிழமை நடைபெறுகின்றது

## வி.பி.சிங் விடாப்பிடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது மாநிலத்தில் ரத யாத்திரை நடத்த அத்வானி முயற்சித்தால் அவர் கைது செய்யப்படுவார் என உத்தரப் பிரதேசத்தின் முதல் அமைச்சரும், தேசிய முன்னணி அரசின் தலைவர்களுள் ஒருவருமான முலாயப் சிங் யாதவ் அறிவித்திருக்கிறார்.

அங்கு முன்னேற்பாடாக 17 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

தம்மைக் கைது செய்து ரத யாத்திரையைத் தடுத்தாலோ அல்லது ராமர் கோயிலைக் கட்டுவதைத் தடுத்தாலோ தேசிய முன்னணி அரசுக்கு தமது கட்சி வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெற்றுவிடும் என்று பாரதீய ஜனதாவின் தலைவர் அத்வானி அறிவித்திருப்பதும்—அதனால் வி பி. சிங் அரசு கவிழும் ஆபத்து ஏற்பட்டிருப்பதும் தெரிந்ததே. [ ]

## சிமெந்து....

பகுதிகளில் இடம்பெற்று வரும் மோதல்களினாலும் இராணுவத்தினர் பலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று, காங்கேசன், மாவிட்டபுரம் பகுதிகளில் கடும் ஷெல் தாக்குதல்களும், இடையிடையே ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் இடம்பெற்ற போதிலும் வலிவடக்கில் விமானத் தாக்குதல்கள் ஏதும் நேற்று இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3 5)

## கிரான்குளம்...

வித்தன.

இதே வேளை –

செட்டிப்பாளையத்தில் கடந்த வெள்ளியன்று பச்சைப்பிள்ளை நற்குணராசா (வயது 30) என்ற இளைஞர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## கோப்பாயில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஒன்று ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலுக்கு அண்மையில் அமைந்துள்ள கலாசார மண்டபத்திற்கும் சன சமூக நிலையத்துக்கும் இடையே விழுந்தது. இருகட்டடங்களும் சேதம் அடைந்தன. ஆலயச் சுவர்களிலும் சிறு சேதம் ஏற்பட்டது

அடுத்த குண்டு வீடு ஒன்றில் விழுந்து வெடித்தபோது இரண்டு கறவை இனப் பசுக்கள் கொல்லப்பட்டன. வீடும் சேதமுற்றது (இ-15-72)

## மலேசியாவில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்ட நாடாளுமன்றத்தில் ஆளும் கூட்டணிக்கு 127 ஆசனங்கள் கிடைத்தன, எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு 48 ஆசனங்களும் சுயேச்சையாளர்களுக்கு 4 ஆசனங்களும் கிடைத்தன. ஒரு தொகுதியின் முடிவு மட்டுமே வெளிவர வேண்டிய நிலையில், ஆளும் கட்சிக் கூட்டணி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றது. (ஆ-எ)

## மாவீரர்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை —

மாவீரர் நாளையொட்டி மினிபஸ்கள், ஓட்டோக்கள், கார்கள் உட்பட சகல வாகனங்களிலும் தமிழீழ தேசியக் கொடியை பறக்கவிட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ 6)

# விவசாயி வவுனியாவில் கைது

யாழ்ப்பாணம், அக் 23 வவுனியாவில் உரம் கொள்வனவு செய்யச் சென்ற விவசாயி ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கைதான பின்னர் அவருக்கு என்ன நடந்தது என்பது குறித்து நேற்று வரை எதுவும் தெரியவில்லை என்று கூறப்பட்டது.

காரைநகரைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உரம் வாங்குவதற்கு வவுனியா சென்றார் அங்குள்ள பல கடைகளில் அவர் உரம் விசாரித்துக் கொண்டிருந்தார். அவ்வேளை அங்கு வந்த படையினர் அவரைக் கைது செய்தனர் என அறியவந்தது (அ-3)

# ஈழத் தமிழ் அன்னையர் கனடாவில் உண்ணாவிரதம்

இலங்கையின் வடக்கு-கிழக்கில் நிரந்தர அமைதியும் சமாதானமும் வேண்டி, ரொறன்ரோ நகரில் கனடா தமிழ் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த பெண்கள் உண்ணாவிரதமும், பிரார்த்தனையும் நடத்தினர்.

உண்ணாவிரதம் கனடா தமிழர் தேசிய மன்றத்தின் ஆதரவில் ரொறன்ரோ சென் போல்ஸ் தேவாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரதத்தில் ஐம்பது பெண்கள் உட்பட குழந்தைகளும், ஆண்களுமாக சுமார் 250 பேர் பங்குபற்றினர்

தேவாலய வளவில் தமிழர் பிரச்சினைகளை விளக்கும் பதாகைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வைக்கப்பட்டிருந்தன.

இந்த உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக பெருமளவில் கனேடியர்களும் வருகை தந்திருந்தனர். இவர்களுக்கு தமிழர் பிரச்சினைகள் பற்றி விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

கனடாவில் வெளிவரும் 'சன்', 'ரொறன்டோ ஸ்டார்' போன்ற ஆங்கில தினசரிகளும் இந்த உண்ணாவிரதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருந்தன. (அ-6)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
22-05-1926

அழிப்பு:
27-10-1987

திதி:
23 10-1990

அமரர்

## திரு. த. தருமலிங்கம்

[யா/ கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை ஒய்வுபெற்ற அதிபர்.]

என் அன்புத் தெய்வமே, ஆண்மையின் சிகரமே, பாசத்தின் உறைவிடமே, பண்பின் ஒளிவிளக்கே. ஆண்டு மூன்று ஆயிடினும் நீங்கள் எம்மோடு வாழ்ந்த நாட்கள் எம் நெஞ்சை விட்டு அகலாதையா. என் ஆருயிரே நீங்கள் இல்லாத என் வாழ்வு மதியிழந்த வானம் போல் காட்சியளிக்கின்றதையா. மூன்றாண்டும் என் கண்ணீர் ஆறாக உருகி ஓடுகிறதையா. உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் அன்பு மனைவி
திருமதி க. தருமலிங்கம்
[யா/ கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை ஓய்வுபெற்ற அதிபர்]
மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்.

தருமபதி,
கே.கே.எஸ். றோட்,
கொக்குவில். [14533]

# மரண அறிவித்தல்

## வி. எம். பேரம்பலம்

காரைநகரைச் சேர்ந்த வி. எம். பேரம்பலம் (பட்டயக் கணக்காளர்; வி. எம். பேரம்பலம் அன் கம்பனி பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பங்காளர்) ஆஸ்திரேலியாவில் 20-10-90 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி முருகேசு, சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி. சண்முகத்தின் அன்பு மருமகனும், சௌபாக்கிய கௌரியின் அன்புக் கணவரும், திருமதி ஞானவதி கனகலிங்கம், சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், க. கனகலிங்கத்தின் (லண்டன்) அன்பு மாமனாரும், யாழ் - கொழும்பு பிரபல வர்த்தகர்களான காலம்சென்ற வி. எம். சண்முகம், காலம்சென்ற வி.எம். பரமநாதன், திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை, வி. எம். கந்தையா (ஓய்வு பெற்ற வருமானவரி மதிப்பீட்டாளர்), திருமதி செல்லம்மா யோகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், டாக்டர் சிவானந்தன் (மலேசியா), திருமதி சௌந்திரகௌரி செல்வரட்ணம், டாக்டர் சர்வானந்தா (மலேசியா), டாக்டர் பிரபானந்தா (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

தகவல்:
திருமதி S. யோகரட்ணம்

(C/5332)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org